செ.வெ.எண்.30 நாள்: 19.05.2019

தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் வாக்குச்சாவடிகளில் நடைபெற்ற வாக்குப்பதிவு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

---

தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் இன்று (19.05.2019) நடைபெற்றது. வாக்குச்சாவடிகளில் நடைபெற்ற வாக்குப்பதிவு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாப்பிள்ளையூரணி, சவேரியார்புரம், சிலுவைப்பட்டி, தாளமுத்துநகர், ராஜபாளையம், புதியம்புத்தூர், மணியாச்சி, சவலாப்பேரி, ஆலந்தா, சிங்கத்தாகுறிச்சி, தூத்துக்குடி ஸ்டேட் பேங்க் காலணி செவன்த் டே அட்வன்டிஸ்ட் பள்ளி, குறுக்குச்சாலை ஆகிய வாக்குப்பதிவு மையங்களில் உள்ள வாக்குச்சாவடிகளில் நடைபெற்ற வாக்குப்பதிவு பணிகளையும், வாக்குச்சாவடி மையங்களில் செய்யப்பட்டுள்ள குடிநீர் வசதி, கழிப்பறை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளனவா என்பதையும், மாற்றுத்திறனாளிகளுக்கு வீல் சேர் வசதி, வாகன நிறுத்திமிடம் வசதி, வாக்காளர்கள் காத்திருப்பு பந்தல் வசதி உள்ளிட்ட வசதிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் வாக்குசாவடி அலுவலர்களிடம் வாக்குப்பதிவு தொடர்பான விபரங்கள் கேட்டறிந்தார். துரிதமாகவும், சிறப்பாகவும் பணியாற்றிடுமாறு அறிவுரை வழங்கினார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.